# மேலச்சேரிக் குடைவரைக் கோயில்

தமிழ்நாட்டின் விழுப்புரம் மாவட்டத்தில், மேல்மலையனூர் வட்டத்தில் அமைந்துள்ள மேலச்சேரி என்னும் ஊரில் காணப்படும் ஒரு குடைவரைக் கோயில். இது சிவனுக்காக அமைக்கப்பட்ட கோயில் ஆகும். இது "மட்டிலேசுவரர் கோயில்" என அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது. இது பல்லவர் காலத்தைச் சேர்ந்தது.

## அமைவிடம்

செஞ்சியிலிருந்து மேல் மலையனூர் செல்லும் சாலையில் சுமார் 4 கிமீ தூரத்தில் உள்ளது சிங்கவரம். சிங்கவரம் முடியும் இடத்தில் இருந்து மேலச்சேரி தொடங்குகிறது. இடதுபுறம் உள்ள ஒரு மேல் நிலைத் தண்ணீர் தொட்டிக்கு அடுத்து இடப்புறம் பிரியும் ஒரு மண் சாலையில் ஒரு ஏரியைச் சுற்றிக் கொண்டு சுமார் 1/2 கிமீ சென்றால் ஒரு சிறு பாறையின் மீது தெரியும் முருகர் கோயில். அங்கே பிரியும் காங்கிரீட் சாலையில் மலையைச் சுற்றிக்கொண்டு பின்னால் போனால் 'சிகாரி பல்லவேசுவரம்'.

## குடைவரை அமைப்பு

குடைவரை மேற்கு நோக்கியது. நான்கு தூண்கள் கொண்ட ஓரே ஒரு வரிசைத் தூண்களும் பின் சுவர் கருவறையும் கொண்ட எளிய குடைவரை. நடுவில் இரு முழுத் தூண்கள். பக்கத்தில் சுவரை ஒட்டி அரைத் தூண்கள். எல்லாத் தூண்களும் முழுதும் சதுரமானவை. தூண்களின் மீது விரிகோண போதிகை. அதன் மீது உத்திரம். மேலே சற்றே வெளிநீட்டி இருக்கும் மெல்லிய போதிகை. அதன் மீது கபோதம். இந்த உறுப்புகள் அனைத்தும் எந்த சிற்ப செதுக்கலும் அற்றவை.

மண்டபத்தின் பின்புறச் சுவரில் குடையப்பட்டு உள்ள கருவறையில் தாய்ப் பாறையிலேயே செதுக்கப்பட்ட ஆவுடையாருடன் கூடிய இலிங்கம் காணப்படுகிறது.

பல்லவ மன்னர்கள் தொண்டை மண்டலத்தில் அமைத்த குடைவரைக் கோயில்களில் இவ்வாறு தாய்ப் பாறையில் செதுக்கிய இலிங்கம் காணப்படுவதில்லை ஆதலால், இது இக்கோயிலுக்கு உரிய சிறப்புக்களில் ஒன்று ஆகும்.

இங்கு மண்டபத்தினுள் காணப்படும் பார்வதி சிற்பமும், குடைவரை முகப்பில் உள்ள பிள்ளையார் சிற்பமும் பிற்காலத்துக்கு உரியவை.




சுவருக்கும் தூண் வரிசைக்கும் இடையே உள்ள இடத்தை அர்த்த மண்டபமாக கொள்ளலாம்.

இதன் வடக்கு சுவரில் பாறையைக் குடைந்து பிரிஹந்நாயகி அம்மன் சிலை பிற்காலத்தில் வெட்டப்பட்டுள்ளது.



## கருவறை


பின்சுவரில் கருவறை வெட்டப்பட்டுள்ளது. இறைவன் மத்திலீசுவரர் என அழைக்கப்படுகிறார்.

ஆவுடையார் ஜகதி, உருள் குமுதம், கம்பு, பாதங்களுடன் ஆன கண்டம், கம்பு, பட்டிகை என பாதபந்த தாங்குதள அமைப்புடன் திகழ்கிறது. லிங்க பாணம் அதன் மீது அமைந்துள்ளது. கூரையில் செதுக்கப்பட்டுள்ள ஒரு தாமரை சிதைந்துள்ளது. லிங்கம் தாய்ப் பாறையிலிருந்தே வெட்டப்பட்டுள்ளது. தாய்ப் பாறை லிங்கமும் கூரைத் தாமரையும் தமிழகத்தில் சித்தன்னவாசல் குடைவரை தவிர வேறு எங்கும் இல்லாதது.

சித்தன்னவாசலில் தாய்ப்பாறை லிங்கம் தரைமட்டமாக்கப்பட்டு சுவடுகளே எஞ்சியுள்ளன.

## கல்வெட்டு

வட நடுத்தூணின் மேற்கு முகத்தின் மேல் பகுதியில் உள்ள பல்லவ கிரந்தக் கல்வெட்டொன்று "சிறீ சிக்காரி பல்வவேசுவரம் எனப்படும் இந்தச் சிவன் கோயில் பேரரசன் சந்திராதித்த மன்னனால் கட்டப்பட்டது." எனக் குறிப்பிடுகிறது. ஆனால், இங்கே "சிக்காரி" என்பதும், சந்திராதித்தன் என்னும் மன்னன் பெயரும் அடையாளம் காணப்படவில்லை என்பதுடன் இது பல்லவர்களுடன் தொடர்புள்ளதாகவும் காணப்படவில்லை.



*"சர்வநாதனான அரசர் சந்திராதித்யர் சிம்ஹபுரத்தில் ஸ்ரீ சிகாரி பல்லவேசுவரம் எனும் இறையகத்தை எழுப்பினார்." யார் இந்த சந்திராதித்யர் என்று தெரியவில்லை.*

எனினும் கோயிற் பெயரில் "பல்லவேசுவரம்" என்று இருப்பதாலும், மண்டகப்பட்டு, தளவானூர், சிங்கவரம் போன்ற பல்லவரின் குடைவரைக் கோயில்களுக்கு அண்மையில் அமைந்திருப்பதனாலும் இது பல்லவர் காலத்துக் குடைவரை என்று எடுத்துக்கொள்ளலாம் என்பது சில ஆய்வாளர்கள் கருத்தாக உள்ளது.

அத்துடன், பிற அம்சங்களையும் கருத்தில் எடுத்து இது மாமல்லன் எனப்படும் முதலாம் நரசிம்மவர்மன் காலத்தது எனப் பல ஆய்வாளர்கள் நம்புகின்றனர்.

இங்குள்ள கல்வெட்டின் எழுத்தமைதி மாமல்லபுரத்தில் உள்ள முதலாம் நரசிம்மவர்மனின் கல்வெட்டுக்களோடு ஒத்திருப்பதால், இக்கோயில் ஏழாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் குடையப்பட்டிருக்கலாம் என்றும், சந்திராதித்தன் என்பது முதலாம் நரசிம்மவர்மன் அல்லது முதலாம் பரமேசுவரவர்மனுடைய பெயர்களில் ஒன்றாக இருக்கக்கூடும் எனவும் ஆய்வாளர் துப்ராயில் கருத்து வெளியிட்டுள்ளார்.

*[ துப்ராயில் - Jauveau-Dubreuil, G.*

*Pallava Antiquities (Translated inti English by V. S. Swaminadha Dikshitar), Vol 1, Asian Educational Services, New Delhi, 1994 (First Edition - 1916), p. 65, 66) ]*


## புதிய மண்டபம்

அழிவிலிருந்த பழைய மண்டபங்களின் தூண் முதலான உறுப்புகளைக் கொண்டு தற்போது புதிய மண்டபம் ஒன்று குடைவரையோடு இணைந்தபடி அதன் முன்னால் கட்டப்பட்டுள்ளது. ஆறு வரிசை தூண்கள்.

மண்டபம் முன்னிருந்து மூன்றாம் வரிசைத் தூண்களால் இரு பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. நுழைவாசல் இங்கு அமைக்கப்பட்டுள்ளது. முன்புறம் கைப்பிடி சுவராலும் பின்பக்கம் முழு உயர சுவர்களாலும் மூடப்பட்டுள்ளன.

## நீராழி மண்டபம்

குடைவரைக்கு எதிரிலுள்ள எரிக் கரையில் ஒரு நாற்கால் நீராழி மண்டபம் உள்ளது. எளிய தாங்குதளம். 3 சதுரம் 2 கட்டு தூண்கள். வெட்டுப் போதிகை, உத்திரம், வாஜனம், வலபி, வளைந்திறங்கும் கபோதம், கூரை வரை கல் கட்டுமானம். அதன்மேல் செங்கல் சுதைக் கட்டுமானம் - மாடங்களால்அமைந்த வேதிகை, வேசர (வட்ட வடிவ) கிரீவம், சிகரம்.



குன்றின் உச்சியில் முருகர் குடி இருக்கிறார்